| Publication : Dina Kural | Subject : AVI Press Conference Chennai |
|---|---|
| Date of Publish : 15th July 2018 | Edition : Chennai |

# தினகுரல்

## தமிழக அரசன் மின்-சிகரெட்டுகள் தடை முன்மொழிவை எதிர்க்கும் AVI



**சென்னை, ஜூலை.16**

நாடு முழுவதும் உள்ள மின்-சிகரெட் பயனர்களின் பிரதிநிதியாகத் திகழும் அசோசியேஷன் ஆ்.்.ப் வேப்பர்ஸ் இந்தியா **(AVI)** அமைப்பு, மாநிலம் முழுவதும் மின்-சிகரெட்டுகளை தடை செய்யும் தமிழக அரசின் முன்மொழிவை அமல்படுத்த வேண்டாம் என வலியுறுத்தியுள்ளது. மின்-சிகரெட்டுகளை தடை செய்யும் மாநில அரசின் முன்மொழிவை, கடந்த மாதம், மாநில சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர்.விஜயபாஸ்கர் அவர்கள் அறிவித்தார். வேப்பர்ஸ் அமைப்பின் முன்னோடிகள் மாநில சுகாதாரத் துறை அமைச்சர் மற்றும் முதன்மை செயலாளர் (சுகாதாரம்) டாக்டர். ராதாகிருஷ்ணன் அவர்களிடம் இக்கோரிக்கையை முறையிட்டனர் மற்றும் நேரில் சந்தித்தனர். **AVI** முன்னோடிகள், அரசிடம் அம்முன்மொழிவிற்கு மாற்றாக, புகைபிடிப்பதற்கான மாற்று வழிமுறைகளாகத் திகழும் வேப்பிங் மற்றும் **ENDS** அல்லது மின்-சிகரெட்டுகள் போன்றவற்றை ஒழுங்கு படுத்துவதற்கானதொரு சட்டத்தை உருவாக்குமாறு கூறினர்.